(இ) டெமோகிராபர், புள்ளிவிபர உதவியாளர்கள், புள்ளி விபர ஆய்வாளர், கம்ப்யூட்டர், (கணக்கர்) எழுத்தர், இளநிலை எழுத்தர்.

(உ) சோஷியல் சையன்டிஸ்ட் தவிர மற்ற எல்லா அலுவல் களுக்கும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த டெமோகிராபிக் செல் என்ன பணிகளைச் செய்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நாட்டிலே இப்போது மிக அதிக நெருக்கடியை உண்டாக்குகின்ற மக்கள் தொகைப் பெருக் கத்தைக் குறித்த புள்ளி விவரங்களையும், அதைக் கட்டுப்படுத்து வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பல்வேறு வகையாக இருப்பதால் அதனுடைய தர விளைவுகள்பற்றியும் தனித் தனியாகப் புள்ளி விபரங்களை அவ்வப்போது சேகரித்துத் தருகிறது.

வெங்கல் கிராமத்திற்கு உயர்நிலைப்பள்ளி

* 437 வினா.—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், வெங்கல் கிராமத்தில் அரிசன நலத் துறையின்கீழ், ஒரு உயர்நிலைப் பள்ளி துவக்குவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: வெங்கல் கிராமத்தில் அரிசன மக்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். கல்வித் துறையில் ஒரு பள்ளி தொடங்க வேண்டுமென்றால் 12,500 ரூபாய் பங்குத் தொகை கொடுக்க வேண்டியிருக்கிறது. அரிசன மக்களுக்காகப் பல்வேறு இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளில் துவக்கப்பட்டிருப்பது போல் இங்கு துவங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அரிசன மக்கள் அங்கு அதிகம் என்று சொல்வது தவறு. 3,085 மக்கள் தொகையில் அரிசன மக்கள் ஏறத்தாழ 1,700 பேர்தான் இருக்கிறார்கள். மாணவர்கள் தொகையில்கூட இப்போதுள்ள ஊராட்சி உயர்தர ஆரம்பப் பள்ளியில் 489 பேரில் 195 பேர்தான் அரிசன மாணவர்கள்

இருக்கிறார்கள். சுற்று வட்டாரத்தில்கூட ஐந்து மைல் சுற்றளவில் வடமதுரை, பொன்னபுரம், செம்மேடு கிராமங்களில் மூன்று நடு நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இவைகளை எண்ணிப் பார்க்கும் போது நலத்துறை மூலமாக அங்கு பள்ளி தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

பெரியபுலியூர் அரிசனக் குடியிருப்பு

* 438 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி துணை வட்டம், பெரியபுலியூர் அரிசன காலனி மக்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டம் மேலும் கால தாமதப்படுவதன் காரணம் என்ன?

(இ) இது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) பிரிவு 6 விளம்பல் அரசால் ஏற்கப்பட்டு 13—10—1971-ம் தேதியில் அரசிதழில் வெளி யிடப்பட்டுள்ளது. அரிசன நலத் தாசில்தாரால் அனுப்பப்பட்டுள்ள நில விலை மதிப்பீட்டு அறிக்கை செங்கை மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் பரிசிலனையில் உள்ளது.

(இ) அரசால் நிதி ஒதுக்கீடு செய்தவுடன் அவார்டு பாஸ் செய்து விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : நிதி ஒதுக்கீடுகள் விரைவாகச் செய்து 1973-க்குள்ளாக, இறுதியிலாவது மனைப் பட்டாக்கள் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவார்டு பாஸ் செய்து விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

கோணப்பராயன்குளம் கிராமத்துக்கு சாலை வசதி

* 439 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், கோணப்பராயன்குளம் கிராம தாழ்த்தப்பட்ட மக்கள் சுடுகாட்டுப் பாதை இல்லாது சிரமப் படுகிறார்கள் என்பது உண்மையா?